Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

15.05.2020 வெள்ளிக்கிழமை

## விபத்துச் சிகிச்சை பிரிவில் ஒரே நாளில் 70 பேர் சேர்ப்பு

யாழ்ப்பாணம், மே 15
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் விபத்துச் சிகிச்சைப் பிரிவுக்கு நேற்று முன்தினம் மாத்திரம் ஒரே நாளில் 70 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர் 2

## முகக்கவசம் இன்றி நடமாடியோருக்கு 1,000 ரூபா தண்டம்

### சாவகச்சேரி நீதிமன்று அதிரடி

சாவகச்சேரி, மே 15
பொது இடங்களில் முகத்திரை அணியாமல் நடமாடியவர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் தலா ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. கடந்த புதன்கிழமை மது பான விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டு உள்ளதாக 2

# 5 பேருக்கும் கண்டறியப்பட்டது இறந்த கொரோனா வைரஸே!

## மருத்துவ நிபுணர் ரஜந்தி விளக்கம்



யாழ்ப்பாணம், மே 15
யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வீடு திரும்பியவர்களுக்கு மேற்கொண்ட சோதனைகளில் 5பேருக்கு குறைந்த அளவில் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்களது உடலில் கொரோனா வைரஸ் இறந்த நிலையில் இருந்திருக்கவேண்டும். அதுவே பி.சி.ஆர். சோதனையில் கண்டறியப்பட்டிருக்கவேண்டும். இறந்த வைரஸ் ஒருவரிடமிருந்த இன்னொருவருக்குப் பரவாது. இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நுண்ணுயியல் மருத்துவ நிபுணர் திருமதி ரஜந்தி ராமச்சந்திரன் தெரிவித்தார். 2

## அபாய வலயங்கள் அனைத்தும் திறப்பு

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 15
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டிருந்த கொழும்பு 12, பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் ஜா எல, சுதுவெல்ல பிரதேசம் ஆகியன திறந்துவிடப்பட்டுள்ளன என்று கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். இதற்கமைய, இந்தப் பகுதிகளில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன எனவும் 2

## அஞ்சலி செய்தோரிடம் வீடு சென்று விசாரணை


### மீண்டும் சிறை செல்லப்போகிறீர்களா எனவும் பொலிஸ் மிரட்டல்

முல்லைத்தீவு, மே 15
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் ஆரம்ப நாளான கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியோரின் வீடுகளுக்கு நேற்றுச் சென்ற பொலிஸார் அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத் 2

## யாழ்ப்பாண மாவட்டத்தில் அபாயம் மிகக் குறைவே!

### பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 15
யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா அபாயம் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. மக்கள் பதற்றமடையத் தேவையில்லை. இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இன்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு 2



## இளைஞன் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு

மயிரிழையில் உயிர்தப்பினார் மந்திகையில் சம்பவம்

கொடிகாமம், மே 15
யாழ்ப்பாணம் வடமராட்சி மந்திகையில் நேற்று நள்ளிரவு இளைஞன் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். மயிரிழையில் உயிர்தப்பிய அவர் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். புலோலியைச் சேர்ந்த பசுபதி அனுசன் (வயது 22) என்பவரே படுகாயம 2A

## நோயாளர்கள் வருகை போதனாவில் அதிகரிப்பு

### பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 15
ஊரடங்கு காலத்தில் மருந்துகளைப் பெறாத நோயாளர்கள் இப்போது அதிகளவில் மருத்துவமனைக்கு வருகை தரு வதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா தெரிவித்தார். 2

## மக்களின் காணி விவரங்கள் பதிவு செய்யும் படையினர்!

### முல்லைத்தீவில் மக்கள் அச்சம்

முல்லைத்தீவு, மே 15
முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் வீடுகளுக்கு செல்லும் படையினர் மக்களின் காணி விவரங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்கள்வாழும் ஐந்து பிரதேச சபைகளின் கீழ் உள்ள கிராமங்களில் 2

## ஒருபுறம் கொரோனா மறுபுறம் டெங்கு

### பாதிப்பு அதிகரிக்க வாய்ப்பு

கொழும்பு, மே 15
எதிர்வரும் வாரங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதால், நாட்டின் தென் மேற்கு பகுதியில் வாழும் மக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்று டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காணப்படும் இவ் 2

## விபத்துச்....

என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரி வித்தார். ஊரடங்கு தளர்த்தப்பட்டு தற் போது மதுபானசாலை கள் திறக்கப்பட்ட வருகின்றன. இதனால் விபத்துக்களால் காயம டைந்து மருத்துவம னையில் சேர்க்கப்படுப வர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதா என்று இன்று இடம் பெற்ற ஊடகவியலா ளர் சந்திப் பில் எழுப் பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். 'நேற்று முன்தினம் மாத்திரம் 70பேர் மருத்துவமனை யில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 10 பேர் குடும்ப வன்முறைக ளால் பாதிக்கப்பட்டுள் ளனர். மேலும் 6 பேர் வீதி விபத்துக்களில் காயமடைந்து மருத்து வமனைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர். ஏனை யோர் சத்திரசிகிச்சை உள்ளிட்ட ஏனைய விடயங்க ளுக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். நகரப் பகுதிகளில் பயணிக்கும்போது மணித்தியாலத்துக்கு 30 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வேகத்திலேயே செல்ல வேண்டும். இதன் மூலம் விபத்துக்க ளைக் குறைக்க முடியும்' என் றார் பணிப்பாளர். (ஒ.5)

# 5 பேருக்கும் கண்டறியப்பட்டது

யாழ்ப்பாணத்தில் முதல் தொற்றாளருடன் நெருங்கிய தொடர்பிலிருந்தவர்கள் காங்கே சன்துறையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த னர். அவர்களில் 16 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. சிகிச்சைக்கு அனுப் பப்பட்டனர். அவர்கள் 16 பேரும் தற்போது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். வீடுகளில் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் தனிமைப்படுத்தல் காலம் முடிந்த 6 பேருக்கு நேற்று சோதனை நடத்தப்பட்டது. இதன்போது 5 பேருக்கு தொற்று குறைந்த அளவில் அவதானிக்கப் பட்டது.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் பத்திரிகை யாளர் சந்திப்பு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இன்று இடம்பெற்றது. இதில் பங்கேற்ற மருத்துவ நிபுணர் திருமதி ரஜந்தி ராமச்சந்திரன் தெரிவித்ததாவது: கொரோனா வைரஸின் '[இறைபோ நியூக்கிளிக்' அமிலம் (ஆர்என்ஏ) இருக்கின் றதா இல்லையா என்பதைத்தான் பி.சி.ஆர். சோதனை ஊடாகக் கண்டறியலாம். அந்த வைரஸ் உயிருடன் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதைக் கண்டறிய முடியாது. கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றவர்கள் விடுவிக்கப்பட முன்னர் இரண்டு தடவைகள் சோதனைக்கு உட்படுத் தப்படுவார்கள். அப்போது 'இறைபோ நியூக்கிளிக்' அமிலம் இருக்கின்றதா இல் லையா என்பதுதான் பார்க்கப்படும். அது இல்லை என்றால் அவர்கள் விடுவிக்கப் படுவார்கள். யாழ்ப்பாணத்தில் தற்போது தொற்றுக் குறைவான அளவில் கண்டுபிடிக் கப்பட்டவர்களின் உடலில் இறந்த வைர ஸின் 'இறைபோ நியூக்கிளிக்' அமிலம்தான் இருக்கவேண்டும். ஒருவரின் உடலில் தொற்று கண்டறியப்பட்டு சிகிச்சையின் பின்னர் வைரஸ் அழிக்கப்படும்போது அதன் கலங்கள் ஒரேயடியாக வெளியேற்றப்படுவது கிடையாது. படிப்படியாகவே வெளியேற்றப் படும். வைரஸ் உயிருடன் இருக்கின்றதா இல்லையா என்பதைக் கண்டறியும் வசதி இலங்கையில் இல்லை, என்றார். அப்படியா னால் அவர்களின் உடலில் இருப்பது உயிரி ழந்த வைரஸ்தான் என்று எப்படிக் கூறு கின்றீர்கள் எனக் கேள்வி எழுப்பப்பட்டது. வேறு நாடுகளில் கொரோனா தொற்று சிகிச்சையளிக்கப்பட்டு வீடு திரும்பியவர்க ளுக்கு நடத்தப்பட்ட சோதனையில் இதே போன்று இறந்த வைரஸ் உடலில் இருப்பது கண்டறியப்பட்டது. அவர்களது சோதனை முடிவுகளுடன் எங்களுடைய சோதனை முடிவுகளும் ஒத்துப்போவதால் இதனைக் கூறுகின்றோம் என்று குறிப்பிட்டார்.

மேலும், 5பேருக்கும் கொரோனாவுக்குரிய அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை என்பதுடன் அவர்கள் ஆரோக்கியமாக இருக்கின்றார்கள் என்றும் தெரிவித்தார். இதேவேளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், அவர்கள் 5பேரும் தமது வீடுகளில் சுயதனிமைப்படுத்த லிலேயே இருந்தார்கள். தற்போது மேலும் 14 நாள்கள் சுயதனிமைப்படுத்தியுள்ளோம். இறந்த கொரோனா வைரஸ் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு பரவாது என்று குறிப்பிட்டார். (ஒ.5)

## முகக் கவசம்...

அறிந்ததும் முகத்திரை அணியாமல் வீதியில் ஓடி வந்தவர்கள் உட்பட பலருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் வழக்குப் பதிவு செய்த னர்.

இந்த வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது முகக் கவசம் இல்லாமல் நடமாடியவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மக்களை கொரோனாத் தொற்றிலி ருந்து பாதுகாக்கவே முகத்திரை அணிய வேண்டுமென வலியுறுத் தப்பட்டு வருகிறது. இது தெரிந்தும் அதனை உதாசீனம் செய்வது தண்ட னைக்குரிய குற்றமாகும் என எச்ச ரிக்கையும் விடுக்கப்பட்டது. (ம-9)

## அபாய வலயங்கள்

அவர் குறிப்பிட்டார். இலங்கை யில் கொரோனா தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப் பட்ட பகுதிகள் எதுவும் இல்லை எனவும், அனைத்துப் பகுதிகளும் திறந்து விடப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார். (ஓ.5,22)

## அஞ்சலி...

தீவு மாவட்ட அமைப்பாளர் திலகநாதன் கிந்துஜன் தெரி வித்தார்.

சிவில் உடை தரித்த தம்மைப் பொலிஸார் என அடை யாளப்படுத்தியவர்களே இவ்வாறு ஒவ்வொருவரினதும் வீடுகளுக்குச் சென்று நினைவேந்தல் நிகழ்வை செய்தவர்க ளது பெயர் விவரங்களைக் கேட்டு விசாரணை மேற்கொண் டதோடு பதிவுகளையும் மேற்கொண்டனர் .அஞ்சலி செலுத்தியோரிடம் " மீண்டும் சிறை செல்ல போகின்றீர் களா ?" எனவும் பொலிஸார் மிரட்டல் விடுத்துள்ளனர். அத்தோடு இவ்வாறான நிகழ்வுகளைச் செய்வதாக இருந் தால் முற்கூட்டியே பொலிஸாரின் அனுமதியைப் பெற வேண்டும் எனவும் கூறி சென்றுள்ளனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பா ளர் தெரிவித்தார் . நினைவேந்தல் மேற்கொண்ட இடத்துக் குச் சென்ற விசேட அதிரடிப்படையினர் மற்றும் அரச புலனாய்வாளர்கள் பொலிஸார் ஆகியோர் அப்பகுதியில் உள்ள மக்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதோடு, சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர் என்றும் அவர் தெரிவித்தார். (ப-246)

## யாழ்ப்பாண மாவட்டத்தில்...

கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா எதிர்ப்பில் உடல், உள, ஆரோக்கியம் முக்கியமானது மக்கள் பதற்றமடையக் கூடாது. கொரோனா தொற்றுத் தொடர்பான தகவல் கள் வெளியிடும்போது சம்பந்தப்பட்ட தரப்பினரது அவர்களது உறவி னர்களது மனநிலையையும் கவனத்தில் கொள்ளவேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தொற்று அபாயம் மிகக் குறைந்த மட்டத் திலேயே உள்ளது. சமூகத் தொற்றும் இல்லை. இங்கு இடம்பெற்று வரு கின்ற பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும், என்றார். (ஒ.5)

## நோயாளர்கள்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இன்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப் பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்களுக்கு தொடர்ச்சியாக மருந்துகளை எடுத்தவர்களில் சிலர் ஊரடங்கு காரணமாக அதனைப் பெற்றுக் கொள்ளாமல் இருந்துள்ள னர். நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலை யில் அவ்வாறானவர்கள் இப்போது மருத்துவ மனைக்கு அதிகளவில் வருகின்றார்கள். அவர்கள் விடுதிகளில் சேர்க்கப்படுகின்றனர். மேலும் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளா னவர்கள் சங்கானை, உரும்பிராய், கொடிகா மம் பகுதிகளில் இருந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர், என்றார். (ஒ,5)

## ஒருபுறம் கொரோனா

வேளையில், டெங்கு நோய் தொடர்பிலும் விழிப்புணர்வுடன் இருப்பது முக்கியம் என்று டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் அநுர ஜயசேகர தெரிவித்தார். டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமானால், கொரோனா நோயாளர் கள் சேர்க்கப்படும் கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு மருத்துவமனையில் ஒரு பகுதியை அவர்களுக்காக ஒதுக்குவதற் கும் திட்டமிட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார். (ஒ,5,22)

## மக்களின் காணி விவரங்கள்...

பச்சை உடை தரித்துச் செல்லும் படை அதிகாரி கள் விவசாய அமைப்புக்களின் தலைவர், மற்றும் கிராம அமைப்பினர் ஊடாக மக்களின் வீடுகளுக்குச் சென்று காணி உறுதிப்பத்திரத்தை பார்வையிட்டு அது தொடர்பிலான விவரங்களைத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். கரைதுறைப்பற்று பிரதேசத்தில் வீடுகளுக்குச் செல்லும்படையினர் தாங்கள் வீடுகளில் இருப்பவர்களின் விவரங்கள் திரட்டுகின்றோம் என்று மக்களிடம் தெரிவித்து அடையாள அட்டை இலக்கம், பெயர் விபரங்கள், காணிகளின் பதிவுகளை திரட்டி வருகின்றார்கள்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வீடுகளுக்குச் செல்லும் படையினர் மக்களின் காணி உறுதிப் பத்திரத்தை வாங்கியை பார்வையிட்டு பதிந்துள் ளதுடன் வேறு எங்கு காணி இருக்கின்றன?, ஒரு குடும்பத்துக்கு மொத்தமாக எங்கு எங்கு எவ்வ ளவு காணிகள் இருக்கின்றன? என்ற விவரங்களைப் பதிவு செய்வதுடன், பயன்பா டற்று இருக்கும் காணிகளாயின் அது தொடர்பி லான விவரங்களையும் திரட்டி வருகின்றார்கள். அந்தப் பதிவு தொடர்பில் படை அதிகாரிகளி டம் மக்கள் கேட்டபோது விவசாயச் செய் கைக்கு படையினர் உதவப் போகின்றனர் என்று தெரிவித்துள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட பகுதிக ளில் கமக்கார மற்றும் விவசாய அமைப்புக்கள் ஊடாக வீடுகளுக்குச் செல்லும் படையினர் காணி அத்தாட்சிப் பத்திரம் மற்றும் துண்டுகளைப் பார்வையிட்டு பதிவு செய்வது டன் வீட்டில் எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்ற பதிவையும் குடும்பத் தலைவரின் பெயர் விவரத்தையும் கேட்டுவருவதுடன் காணி அத் தாட்சிப் பத்திரத்தில் உள்ள பெயர் மற்றும் அதன் பதிவு இலக்கம் என்பனவற்றையும் பதிவு செய்துவருகின்றார்கள். வேறு சில இடங்களில் கிராம மட்ட அமைப்புக்கள் ஊடாக மக்களைக் குடும்ப அட்டையுடன் நிலக்கடலை மற்றும் விதை தானியங்கள் மானியம் வழங்கப்படவுள்ள தாகத் தெரிவித்து மக்களை அழைத்து குடும்ப அட்டை பதிவினை மேற்கொள்வதுடன் விவசா யக் காணிதொடர்பான விவரங்களையும் திரட்டி வருகின்றார்கள்.

படையினரின் இந்தப் பதிவு நடவடிக்கை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 15 நாள்களுக்கு மேலாக முல்லைத்தீவு மாவட் டத்தில் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட் டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேசங்களில் இவ்வாறு பதிவுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவித் தனர். (ப-19)



# இளைஞன் மீது...

டைந்தார்.
ஊரடங்கு நேரம் வீதியில் பயணித்தவரை நிற்குமாறு கூறியபோது தப்பியோடினார் என்றும் அதன் பின்னர் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றும் படைத்தரப்பினர் பொலிஸாருக்குக் கூறியுள்ளனர். இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது: கொரோனா காரணமாக இரவில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மந்திகை ஆதார மருத்துவமனையை அண்மித்து இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.
இந்தநிலையில், அந்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் சென்றபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட பின்னும் இளைஞன் பயணித்துக்கொண்டிருந்துள்ளார். அந்த இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரமளவில் பயணிக்கும் போது இயலாமையை உணர்ந்த இளைஞன் தனது நண்பனின் வீட்டுக்குச் சென்று வீழ்ந்துவிட்டார். அங்கு நின்றவர்கள் அம்புலன்ஸை வரவழைத்து காயங்களுடன் காணப்பட்ட அந்த இளைஞனை ஏற்றிவிட்டனர். அவர் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருடைய கை, கால், மற்றும் முதுகுப் பகுதிகளில் குண்டுபட்ட மூன்று காயங்கள் உள்ளன என்று இளைஞனின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.
“அவர் தோட்டத்திலுள்ள தந்தையாருக்கு உணவுகொடுத்துவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.” என்றும் உறவினர்களில் ஒருவர் தெரிவித்தார்.
அந்த இளைஞன் இன்று பிற்பகல் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொள்கின்றனர்.
“நேற்று நள்ளிரவு வீதியில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை இராணுவத்தினர் (சிப்பாய்) வழிமறித்துள்ளனர். வந்தவர்கள் கையில் ஏதோ ஆயுதத்துடன் வந்திருக்கவேண்டும், அந்த ஆயுதத்தால் சிப்பாயின் கையில் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்” என்று இராணுவத்தினர் பொலிஸாருக்குக் கூறியுள்ளனர்.
அதுமட்டுமன்றி, “இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் ஒரு மோட்டார்சைக்கிளில் ஒருவர் வந்துள்ளார். அவரை வழிமறித்தபோது நிற்காமல் சென்றுள்ளார். ஊரடங்கு நேரம் என்பதால் அவர் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். எனினும், வந்தவர் தப்பிச்சென்றுவிட்டார்.” என்று இராணுவத்தினர் தமக்குக் கூறியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பில் பொலிஸ் பேச்சாளரிடம் கேட்டபோது, இப்படியொரு சம்பவம் தொடர்பில் தமக்கு அறிக்கையிடப்படவில்லை என்று தெரிவித்தார். காயமடைந்த சிப்பாய் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் பலாலி இராணுவ மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
சம்பவ இடத்துக்குச்சென்ற பருத்தித்துறை நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணையில் ஈடுபட்டார்.
இதேவேளை, சிப்பாய் மீது தாக்குதல் நடத்திய வரைக் கண்டறிய ,இராணுவத்தினர் அந்தப் பகுதியில் சிசிரிவி கமராக்களைச் சோதனை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (த159,26)

## தேசத்தின் விடுதலைவேண்டியவர்கள்

# உலகில் எங்கிருந்தாலும் மே 18ம் நாளை நெஞ்சில் நிறுத்தி அஞ்சலிக்கவேண்டும்

### மாவை. சேனாதிராஜா வேண்டுகோள்



யாழ்ப்பாணம், மே 15
அடக்குமுறை, ஒடுக்குமுறைக்குள்ளான ஒரு இனம் தங்கள் தேசத்தின் விடுதலைக்காக விடிவுக்காக திடசங்கற்பங்கொண்ட மக்கள் இலங்கையிலும், உலகில் எங்கிருந்தாலும் மே 18ஆம் நாளை நெஞ்சில் நிறுத்தி அஞ்சலி செலுத்த வேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராஜா தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;
தமிழின விடுதலைப் போராட்டம், தமிழ்த் தேசத்தின் சுதந்திர மீட்சிப் போராட்டம் தொடங்கி ஏழு தசாப்தங்களை எட்டி விட்டது. முப்பது ஆண்டுகள் ஜனநாயக அறவழிப் போராட்டங்கள் அரசுகளின் இராணுவ அடக்குமுறைக்கு, ஒடுக்குமுறைக்கு உள்ளானது. இனக்கலவரங்கள் தமிழ்மொழி பேசும் மக்களுக்கு எதிராக 1958லிருந்து 1983வரை நாடு முழுவதும் பலதடவைகள் அவிழ்த்து விடப்பட்டன. அடக்கு முறைக்கு அடங்க மறுத்து எழுச்சி கொண்ட தமிழ் இளைஞர் சமுதாயத்திலிருந்து எழுந்த ஆயுதவழிப் போர் முப்பது ஆண்டுகள் மூன்று தசாப்தங்களையும் கடந்து சர்வதேசம் வரை எட்டி நின்றது. சர்வதேச அனுசரணையுடன் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே 2002இல் போர்நிறுத்தமும் இலங்கைத் தமிழர் தேச மக்கள் விடுதலைக்குப் பேச்சுக்களும் உடன்பாடுகளும் நோர்வே ஒஸ்லோ நகரில் இடம்பெற்றது. ஜனநாயக சக்திகளும் போராட்ட சக்திகளும் ஒன்றுபட்டு உயர்ந்து நின்றன. தமிழர் உச்ச பலம் வெற்றியின் விளிம்பில் மீண்டும் ஏமாற்றம் மீண்டும் மூண்டது போர். சர்வதேச சந்தர்ப்பம் தடுமாறிய நிலையில் 2009 மே 18இல் தாயக மண்ணில் இலட்சக்கணக்கில் எம் தமிழ் மக்கள் விடுதலைக்கு வித்துடலங்களாய் வீழ்ந்தனர். அந்த உச்ச விடுதலை விளைநிலத்தின் அடையாளம் தான் முல்லையில் முள்ளிவாய்க்கால். அங்கும் விடுதலை வேண்டிய ஆத்மாக்களுக்கு அஞ்சலி நினைவேந்தல் சுடரேற்றம் ஆண்டுதோறும் இடம்பெறுகிறது.
இலங்கையிலும் உலக நாடுகளிலும் தமிழின விடுதலைப் போரில் உயிரைப் பலிகொடுத்தவர்கள், அவர்கள் குடும்பங்கள், பாதிக்கப்பட்ட போராளிகள், அங்கவீனர்கள், காணாமல் போனோரின் குடும்பங்கள் தமிழின விடுதலை மீது விசுவாசம் கொண்டவர்கள் பல இலட்சம் குடும்பங்கள் மே18இல் கண்ணீர் அஞ்சலி செலுத்துவர். வாழ்நாள் முழுவதும் கண்ணீருடன் துன்பதுயரத்துடன் அவர்கள் வாழ்கின்றனர். இலங்கையில் முள்ளிவாய்க்காலில் நினைவிடம் ஒன்று நிறுவப்பட்டு அறக்கட்டளையினால் நிர்வகிக்கப்படுவதற்கு பொருத்தமான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். சர்வதேச தமிழ் மக்களும் நிச்சயம் அந்த நினைவிடத்துக்கு உதவியாயிருப்பார்கள். கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வரும் நிலையில் மக்கள் ஒன்றுகூடுவதற்கு கட்டுப்பாடுகளுண்டு. அஞ்சலிப்போர் முகக் கவசம் அணிந்து செல்லவேண்டும். திரளாக மக்கள் நடமாடுவது தவிர்க்கப்படுதல் வேண்டும். மருத்துவ நிபுணர் அமைப்புக்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றியே நடத்தல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். 210 நாடுகளில் கொவிட் 19 வைரஸ் தொற்று பரவியிருக்கிறது. இலங்கையிலும் அதே நிலைமைதான். ஆயினும் மே 18ஆம் நாளை நாம் நினைவு கூர்ந்தேயாகவேண்டும். விடுதலை பெற அர்ப்பணிப்போமென திடசங்கற்பத்துடன் உறுதி பூணவேண்டும். 18.18.18 மணி நேரத்தில் அந்த அஞ்சலியை நிறைவுசெய்ய வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
அதனைப் பின்பற்றி தமிழின விடுதலைக்கு வித்துடல் விதைத்த அந்த மக்கள் ஆத்மசாந்திக்காக நீர் ஏரி, கடல் ஓரங்களில், கோவில்களில், வீடுகளில் அமைதியாக விளக்கேற்றி அஞ்சலிப்போம். முள்ளிவாய்க்காலிலும் அந்தந்த மாவட்டங்களிலும் வீடுகளிலும் அமைதியாகச் சுடரேற்றிப் பிரார்த்தித்து அஞ்சலி செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றுள்ளது. (ப)

# இன்னும் 2 வாரங்கள் அவதானம் அவசியம்!

### இல்லையேல் பேராபத்து உறுதி

### மக்களுக்கு சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, மே 15
நாட்டு மக்கள் அனைவரும் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். இல்லையேல் கொரோனா வைராஸால் பேராபத்து ஏற்படுவதைத் தவிர்க்க முடியாமல் போய்விடும். இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க மற்றும் கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா ஆகியோர் இன்று கூட்டாகத் தெரிவித்தனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் கொரோனா வைராஸால் அதிகமாக கடற்படையினர்தான் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள 925 தொற்றாளர்களில் 489 பேர் கடற்படையினர், 10 பேர் இராணுவத்தினர், ஒருவர் விமானப் படைச் சிப்பாய், 35 பேர் முப்படையினரின் உறவினர்கள், 3 பேர் வெளிநாட்டவர்கள், 45 பேர் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பியவர்கள், 67 பேர் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தவர்கள், 276 பேர் பிரதேசங்களிலிருந்து தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட மக்கள்.
இந்தநிலையில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் எமது நடவடிக்கைகள் முன்னோக்கிச் செல்கின்றன. ஆனால், இன்னமும் கொரோனா வைரஸ் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. மக்களின் அத்தியாவசிய சேவை கருதியே கொழும்பு, கம்பஹா தவிர ஏனைய 23 மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தியுள்ளோம். மக்கள் வெளியில் செல்லும்போது கட்டாயம் முகக் கவசங்கள் அணிந்து செல்ல வேண்டும். சமூக இடைவெளியைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.
மக்கள் அனைவரும் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். இல்லையேல் கொரோனா வைராஸால் பேராபத்து ஏற்படுவதைத் தவிர்க்க முடியாமல் போய்விடும். சிங்கப்பூர், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நிலைமை இலங்கையில் ஏற்படக்கூடாது என்பதே இங்குள்ள அனைவரினதும் பிரார்த்தனையாகும். போராலும் சுனாமியாலும் மனிதப் பேரழிவுகளைச் சந்தித்த எமது நாடு கொரோனாவாலும் அழிவுகளைச் சந்திக்கத் தயார் இல்லை - என்றனர். (ஒ,5,22)



# வறிய குடும்பத்துக்கு வீடு கையளிப்பு

வவுனியா, மே 15

வவுனியா மணிப்புரம் பகுதியில் நீண்ட காலமாக கொட்டகை வீட்டில் வசித்து வந்த குடும்பத்துக்கு புதிய வீடு அமைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ரசிக்கா பிரியதர்சினியால் 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியில் இந்த வீடு அமைத்து வழங்கப்பட்டுள்ளது.(ஐ-110)

# 46 ஆயிரத்து 97 ஏக்கரில் வடக்கில் சிறுபோக செய்கை

யாழ்ப்பாணம், மே 15

2020 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற் செய்கையாக 46 ஆயிரத்து 97 ஏக்கர் செய்கை வடக்கு மாகாணத்தில் செய்யப்படுகின்றது என்று மாவட்டக் கமநல சேவைத் திணைக்களம் தெரிவித்தது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள 46 ஆயிரத்து 97 ஏக்கரில் உச்சபட்சமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 22 ஆயிரத்து 267.5 ஏக்கர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 15 ஆயிரத்து 868.5 ஏக்கர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 455.6 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளும் அதேநேரம் மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 500.5 ஏக்கர் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது என்று மாவட்ட உதவிக் கமநல ஆணையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ப-105)

# அனுமதியின்றி மாடுகளை ஏற்றியவர் கைது

மட்டக்களப்பு, மே 15

அனுமதிப்பத்திரம் இன்றி மாடுகளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அட்டாளைச்சேனை பகுதியில் வைத்து நேற்று வியாழக்கிழமை வாழைச்சேனைப் பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டார். 16 மாடுகளை சித்திரவதைக்கு உட்படுத்தும் விதத்தில் கொண்டுசென்ற குற்றச்சான்டின் பேரிலேயே இவர் கைதுசெய்யப்பட்டார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை களை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# சந்தை வாய்ப்பின்றி தவிக்கும் வாழைச் செய்கையாளர்கள்

## குலை 150 ரூபாவுக்கு விற்பனை

யாழ்ப்பாணம், மே 15

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழைப் பழ விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று வாழைக்குலை உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நீர்வேலி, கோப்பாய் , உரும்பிராய் போன்ற பகுதிகளில் அதிகளவில் வாழைச் செய்கை பண்ணப்படுகிறது, வெளிமாவட்டங்களுக்கு வாழைக்குலை ஏற்றுமதி செய்யப்படாமையாலும், அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து வாழைக்குலைகளை எடுத்துச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாலும் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. வாழைப் பழங்கள் மரங்களில் பழுக்க ஆரம்பித்துள்ளதால் அதனை வெட்டி உடனடியாக விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் மரத்தில் இருந்து குலைகள் வெட்டப்பட்டு வீட்டில் வைக்கப்படுகிறன. அவை அழுகும் நிலைக்கு வருவதால் கால் நடைகளுக்கு அவை உணவாக்கப்படும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அதிக வாழைக்குலைகளையும் கால்நடைகளுக்கு வைக்க முடியாதுள்ளதாலும், அவற்றை வீணாக்க முடியாததாலும், உள்ளூரில் குறைந்த விலையில் குலைகள் விற்பனை செய்யப்படுகின்றன. வாழைக்குலை ஒன்று சுமார் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யும்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என்று செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ப-7)



# புத்தளத்திலிருந்த 43 பேர் சொந்த ஊர் திரும்பினர்

மட்டக்களப்பு, மே 15

புத்தளம் மாவட்டத்தில் சிக்கியிருந்த மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 19 பெண்கள் உட்பட 43 பேர் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

தொழில் நிமிர்த்தமாக புத்தளம் மாவட்டத்தின் நரகளி பிரதேசத்தில் சிக்கியிருந்த வர்களே பஸ் மூலம் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டனர்.

புத்தளத்துக்குச் சென்ற இவர்கள் கொரோனா தடுப்பு ஊரடங்குச் சட்டம் காரணமாக சொந்த இடத்துக்குத் திரும்ப முடியாமல் பல்வேறு இன்னல்களுடன் சிக்கியிருந்தனர். புகையிலைப் பயிர்ச் செய்கை, மரக்கறி தோட்டப் பயிர்ச் செய்கை மற்றும் கரவலை மீன்பிடித் தொழில் நிமித்தம் இவர்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு புத்தளத்துக்கு சென்றிருந்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை, கல்குடா, வாகரை, பனிச்சங்கேணி, தட்டுமுனை, கண்டலடி, ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு அழைத்து வரப்பட்டதுடன், வாகரை மற்றும் வாழைச்சேனை ஆகிய பொலிஸ் பிரிவில் வசிக்கும் இவர்கள் பொலிஸ் நிலையத்தில் விவரங்களைப் பதிவு செய்த பின்னர் சொந்த வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். இதன்போது வாகரை பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்களால் உடல் வெப்பநிலை பரிசோதனை அளவீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொலிஸாரால் அழைத்து வரப்பட்டோர்களின் விவரம் பதிவு செய்யப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ப)

# கஞ்சா குற்றச்சாட்டு; இளைஞனுக்கு பிணை

சாவகச்சேரி, மே 15

கஞ்சாவை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவரை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்று அனுமதி வழங்கியது.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 23 ஆயிரத்து 950 மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணை செய்த நீதிவான் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். (ப-9)



# வாழைச்சேனையில் தொற்று நீக்கல்

மட்டக்களப்பு, மே 15

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கும் நோக்குடன் விசேட அதிரடிப் படையினரால் நாடு முழுவதும் தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விசேட அதிரடிப் படையினரின் ஏற்பாட்டில் வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள அரச திணைக்களங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் காணப்படும் இடங்களில் தொற்று நீக்கும் நடவடிக்கை இன்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ஐ

# தொடரும் யானைத்தொல்லை: நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

வவுனியா, மே 15

வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்து சேதம் விளைவிப்பதால் மக்கள் பெரும் இழப்புக்களை சந்தித்துள்ளனர்.

வவுனியா, வீரபுரம் மற்றும் சின்னத்தம்பனை கிராமங்களுக்குள் நேற்று முன்தினம் இரவு புகுந்த யானை மக்கள் குடிமனைப்பகுதியில் இருந்த பயன்தரு மரங்களை சேதப்படுத்தியதுடன் தோட்டங்களையும் துவம்சம் செய்துள்ளது. வீட்டு வளவினுள் காணப்பட்ட பலா மரங்களில் பழங்களைச் சாய்த்து சேதப்படுத்தியதுடன் விளாமரங்களில் உள்ள பழங்களையும் கீழே வீழ்த்தியுள்ளது. அண்மைக்காலமாக வீட்டுத்தோட்டச் செய்கையை மேற்கொள்ளுமாறு விவசாயத் திணைக்களத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வரும் நிலையில் அந்தத் திட்டத்தை மேற்கொண்டவர்களது தோட்டங்களையும் யானை அதிகளவில் சேதப்படுத்தியுள்ளது என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

வாழ்வாதாரப் பயிர்களாகக் காணப்பட்ட கச்சான் போன்ற பயிர்களை யானை சேதப்படுத்தியுள்ளமையால் அந்தப் பகுதி மக்கள் பெரும் கவலையடைந்துள்ளனர். இதேவேளை கிராம வாசியொருவரை யானை துரத்திய போது, அவர் தனது வீட்டின் சமையலறைப்பகுதிக்குள் ஒழிந்ததால் சமயலறைப் பகுதியை யானை சேதப்படுத்தியது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சியாக யானையின் அச்சுறுத்தலுக்குள் வாழும் தமது கிராம மக்களுக்கு உடனடியாக பாதுகாப்பை வழங்குவதுடன் தமது ஜீவனோபாய செய்கையான தோட்டச் செய்கைக்கும் பாதுகாப்பு தரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-110)



### ஊரடங்கு தளர்வின்போதும்

# பரந்தன் றெட்பானாச் சந்தியில் படையினரின் சோதனை தீவிரம்

முல்லைத்தீவு, மே 15

முல்லைத்தீவு , புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் உள்ள றெட்பானா சந்தியில் உள்ள படையினரின் வீதிச் சோதனை நிலையத்தில் வீதியால் செல்லும் மக்கள் மீது படையினரின் சோதனைக் கெடுபிடி அதிகரித்துள்ளது என்று வீதியால் பயணம் செய்யும் மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.



வடக்கில் தற்போது ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தபோது மாவட்டத்தின் பல முதன்மை வீதிகளில் படையினர் பொலிஸார் சோதனை நிலையங்கள் அமைத்துச் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டு வந்துள்ளார்கள். ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில் ஏனைய பகுதிகளை விட விசுவமடு றெட்பானா பகுதியில் உள்ள படையினரின் வீதித்தடை அமைந்துள்ள பகுதி ஊடாகச் செல்லும் பயணிகளை அதில் கடமையில் ஈடுபட்டுள்ள படையினர் கடுமையாகச் சோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதி ஊடாகச் செல்பவர்களின் ஊர்திகள், உந்துருளிகள் மறிக்கப்படுவதுடன் அவர்களின் அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன வற்றைப் பரிசோதனை செய்வதுடன் அரச திணைக்களங்களில் பணி செய்பவர்களையும் படையினர் மறித்து பரிசோதனை செய்துவருகின்றார்கள்.

விசுவமடு, ஊடையார்கட்டு பகுதிகளில் மரக்கறிச் செய்கையாளர்கள், மற்றும் கால்நடை வளர்போரே அதிகளவில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் தங்கள் அன்றாட நடவடிக்கைக்காக விசுவமடுச் சந்தை மற்றும் உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு சந்தைகளுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. றெட்பானாச் சந்தியில் உள்ள படையினரின் வீதிச்சோதனை நிலையம் ஊடாகவே பரந்தன் அல்லது புதுக்குடி யிருப்புக்கு மக்கள் செல்லவேண்டிய நிலையில் படையினரின் இவ்வாறான கெடுபிடிகள் தங்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர். (ப-19)

# உணவுத் தட்டுப்பாட்டால் பால் உற்பத்தியில் வீழ்ச்சி

மட்டக்களப்பு, மே 15

மட்டக்களப்பில் பால் உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. மாதம் 60 ஆயிரம் லீற்றர் பால் கிடைத்துவந்த நிலையில், தற்போது 10 ஆயிரம் லீற்றருக்கும் குறைவான பால்தான் கிடைத்துள்ளது என்று பால் கொள்வனவாளரான நேசதுரை குறிப்பிட் டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற அதிக வெப்பத்துடனான காலநிலை காரணமாக, கால்நடைகளுக்கு உணவில்லாமையால் பால் உற்பத்தி குறைவடைந்துள்ளது என்று மாவட்டத்தின் பண்ணையாளர்கள் குறிப்பிட்டனர். இது தொடர்பில், குறித்த பிரதேசத்தில் உள்ள மணல்பிட்டியில் பால் கொள்வனவு செய்யும் கொள்வனவாளரிடம் வினவியபோது,

நாளொன்றிற்கு 2ஆயிரம் லீற்றர் அடிப்படையில், மாதம் ஒன்றுக்கு 60 ஆயிரம் லீற்றர் பால் கிடைக்கும். ஆனால் கடந்த சித்திரை மாதம் 9 ஆயிரத்து 45லீற்றர் பால்தான் கிடைத்துள்ளது. இந்தச் சரிவு மிக வேகமான சரிவாகும். கடந்த காலங்களில் இவ்வாறான நிலைமை ஏற்படவில்லை. வருடாந்தம், ஆண்டின் ஐப்பசி மாதத்தின் பின்பே பால் உற்பத்தி மிகவும் குறைவாகக் காணப்படும். ஆனால் இந்த வருடம் சித்திரை மாதத்தில் இருந்தே பால் உற்பத்தி மிகக் குறைவடைந்துள்ளது. மாவட்டத்தில் நிலவுகின்ற வெப்பத்துடனான காலநிலை காரணமாக கால்நடைகளுக்கான உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போது நாளொன்றுக்கு 50லீற்றர் தொடக்கம் 60லீற்றர் வரையான பால்தான் கிடைக்கின்றது. இதனால், பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், மே 15

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை சனிக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் மாகியப்பிட்டி, அளவெட்டி, சண்டிலிப்பாய் வடக்கு, டொக்யாட், முள்ளி ஆகிய இடங்களிலும் வவுனியா மாவட்டத்தில் கிறிஸ்தவகுளத்திலும், மன்னார் மாவட்டத்தில் வட்டுபித்தன்மடு,புதுக்காமம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

இதேவேளை நாளை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்திலிருந்து திருக்கேதீச்சரம் வரை,வங்காலை பிரதேசம், சீனத்துறைமுகம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.(ஐ)

# கழிவுப்பொருள் கொள்கலனை திருப்பி அனுப்புவதற்கு ஏற்பாடு

கொழும்பு, மே 15

பிரிட்டனிலிருந்து சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கழிவுப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை மீள் ஏற்றுமதி செய்வதற்கு மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட குறித்த கழிவுப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்கள், இலங்கை துறைமுக அதிகார சபை வளாகம் மற்றும் கட்டுநாயக்க ஏற்றுமதி வலயத்தில் உள்ள தனியார் இடம் என்பனவற்றில் தற்போது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் நீதி மையம் முன்வைத்த மனுவுக்கு அமைய, இந்தக் கழிவுகள் அடங்கிய கொள்கலன்களை மீள் ஏற்றுமதி செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதன்படி, மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையினால் மீள் ஏற்றுமதிக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# உறுப்பினர்களின் பணத்தில் துணுக்காய் மக்களுக்கு அரிசி

## துணுக்காய் பிரதேச சபை முன்மாதிரி

முல்லைத்தீவு, மே 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச சபை, சபை உறுப்பினர்களிடம் பணம் சேர்க்கப்பட்டு விவசாயிகள் கொடுத்த நெல்லை வைத்து 150 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்று சபையின் தவிசாளர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

துணுக்காய் பிரதேச சபையின் அமர்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. அந்த அமர்வில் கடந்த இரண்டு மாத கால கொரோனா காலத்தில் பிரதேச சபையின் நடவடிக்கையில் பல விடயங்கள் பின்தள்ளப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வீதி விளக்குகள் உடனடியாகப் பொருத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



தொடர் மழை பெய்து கொண்டுள்ளதால் டெங்கு பெருக்கம் உருவாகும் என்ற காரணத்தால் கழிவகற்றல் செயற்பாடுகளை நாளாந்தம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதியில் கடந்த இரண்டு மாத கால கொரோனா தாக்கத்தால் வீடுகளுக்குள் முடங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்காக பிரதேச சபை உறுப்பினர்களின் நிதிப்பங்களிப்பில் விவசாயிகளிடம் இருந்து நெல்லைப் பெற்று அதனை அரிசி ஆக்கி வறிய மக்களை இனம் கண்டு 150க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கி வந்துள்ளோம். தொடர்ந்தும் வழங்கி வருகின்றோம். கடந்த இரண்டு மாத இடைவெளியில் துரிதமான விவசாய நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். தற்போதைய நிலையில் கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் சில விடயங்களுக்கு பொலிஸ் ஊடாக நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (ப-19)



## சுகாதார நடைமுறைகள் மட்டக்களப்பில் முன்னெடுப்பு

மட்டக்களப்பு, மே 15

இலங்கை அரசாங்கமானது மக்களின் நாளாந்த இயல்பு வாழ்க்கையையும், நிறுவனங்களின் செயற்பாடுகளையும் கடந்த மே 11ஆம் திகதி முதல் வழமை நிலைக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து மட்டக்களப்பு மாநகர சபையால் பொதுமக்களினதும், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்களினதும் சுகாதார நலன் கருதி பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சிறுவர்நேய மாநகர கட்டமைப்பின் கீழ் செரி மற்றும் யுனிசெப் நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் மட்டக்களப்பு மாநகர சபையால் அதன் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள அரச அலுவலகங்கள் மற்றும் பொது மக்கள் ஒன்றுகூடும் இடங்களில் சுகாதாரப் பாதுகாப்பு முன்ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக மட்டக்களப்பு மாநகர சபையின் முகப்பு வாயிலில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கை கழுவுவதற்கான ஏற்பாடுகளும், தொற்று நீக்கும் செயற்பாடுகளும் உத்தியோக பூர்வமாக பொதுமக்களினதும், பணியாளர்களினதும் பாவனைக்காக கையளிக்கப்படும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. (ப-150)

## அப்பிள் செய்கையாளரை சந்தித்த மாவட்டச் செயலர்

கிளிநொச்சி,மே 15

பச்சிலைப்பள்ளியில் அப்பிள், அன்னாசி செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயியின் தோட்டத்தை கிளிநொச்சி மாவட்டச் செயலர் நேற்று வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

குறித்த விவசாயி எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார். மாவட்டச் செயலருடன், மேலதிக மாவட்டச் செயலாளர், மாவட்ட இடர்முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-6)

## மின்சாரப் பட்டியல்களை தனியாக வழங்க திட்டம்

கொழும்பு, மே 15

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மின்சாரக் கட்டண பட்டியல்களைத் தனித்தனியாக வழங்குமாறு மின்சாரம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர மின்சார சபை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு மாதங்களுக்கான மின்சாரக் கட்டணங்களை ஒரே பட்டியலில் வழங்குவதால், மின் கட்டணத்தில் அதிகரிப்பு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டியதை அடுத்தே அமைச்சர் இந்த உத்தரவை விடுத்துள்ளார். மின்சாரசபை அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர், இரண்டு மாதங்களுக்கான மின்சாரப் பட்டியலைத் தனித்தனியாக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதுவரையில் இரண்டு மாதங்களுக்காக வழங்கப்பட்டுள்ள மின் கட்டணப் பட்டியலில் செலுத்துவதற்கும், மின்சாரக் கட்டணத்தை வழங்க ஒரு மாதகாலவகாசம் வழங்குவதென்றும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது. (க)

## மின் விளக்குகள் பொருத்தல்

யாழ்ப்பாணம், மே 15

வலி. வடக்கு பிரதேச சபையால் தொந்தனை விவசாய வீதி மற்றும் புகையிரத வீதிகளில் புதிய வீதி மின்விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை, மல்லாகம் போன்ற இடங்களில் அண்மைக்காலமாக இருள் சூழ்ந்த பகுதிகளின் வீதிகளில் திருடர் தொல்லைகள் அதிகரித்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்ட நிலையிலேயே இவ்வாறு மின் விளக்குகள் பொருத்தப்படுகின்றன.

இதேவேளை அந்தப் பகுதிகளில் பழுதடைந்த மின்விளக்குகளை திருத்தும் பணிகளும் தொடர்ச்சியாக இடம்பெறுவதாகவும். பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைவாக முன்னுரிமை அடிப்படையில் இப்பணிகளை சாதாரண, மற்றும் கொவிட் 19 அசாதார ண சூழ்நிலை காலத்திலும் இடைவிடாது தொடர்ச்சியாக மேற்கொள்வதாகவும் வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார். (ப-39)

## இனப்படுகொலை வாரத்தின் இரண்டாம் நாள் அஞ்சலி



யாழ்ப்பாணம், மே 15

முள்ளிவாய்க்கால், இனப்படுகொலையின் இரண்டாம் நாள் நினைவேந்தல் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் மானிப்பாய் நவாலி தேவாலயப் பகுதியில் கடைப்பிடிக்கப்பட்டது. 1995 ஜூலை 9 ஆம் திகதி முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயம், நவாலி முருக மூர்த்தி தேவாலயம் மீது சந்திரிகா அரசின் இனப்படுகொலை இராணுவம் குண்டு வீச்சில், சிறுவர்கள் பெண்கள் முதியவர்கள் என ஏறத்தாழ 150 பேர் கொல்லப்பட்டிருந்தனர். அந்த வகையில் முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தில் அவ்வாறு கொல்லப்பட்ட மக்களுக்காகவும் நினைவு கூரப்பட்டது. (ப-26)



# சஜித்தின் சகாக்கள் 30 பேர் ரணிலுடன்!

## பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு

கொழும்பு, மே 15

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் 30 பேர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வரவுள்ளனர் என்று ரணில் ஆதரவு அணி உறுப்பி னரான பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து ஐக்கிய மக்கள் சக்திக்கு சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் சுமார் 30 பேர் வரை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளனர். இது குறித்து எம்முடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. தனிப்பட்ட ரீதியிலும் என்னு டன் கலந்துரையாடியுள்ளனர். உரிய நேரத்தில் அவர்கள் எம்முடன் இணைவார்கள்.

அத்துடன் தேர்தலை நடத்துவதற்கும் நாம் எதிரா னவர்கள் அல்லர். ஆனால், சுகாதார தரப்பினர் பரிந்துரைத்த பின்னர், பாதுகாப்பான சூழலில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் - என்றார். (ம-44)

# வடக்கிலுள்ள இந்தியர்களை திருப்பி அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 15

இந்தியாவில் இருந்து வந்து வடக்கின் 5 மாவட்டங்களி லும் அகப்பட்டு, இந்தியா திரும்ப முடியாமல் தவிக்கும் 341 பேரையும் தாயகம் திரும்ப இந்தியத் தூதரகம் வழி ஏற்படுத்த வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட் டுள்ளது.

இந்தியாவில் இருந்து கடந்த பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இலங்கை வந்த நிலையில் வடக்கில் தங்கி நின்றபோது, கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி ஊரடங் குச் சட்டம் நடைமுறைப்ப டுத்தப்பட்டது. முதல் விமான சேவைகளும் முழுமையாகவே நிறுத்தப்பட்டன. இருப்பி னும் இந்தியா உள்ளிட்ட நாடு களில் அகப்பட்ட இலங்கை மக்களை இலங்கை அரசு தனி விமானங்கள் ஒழுங்குசெய்து அழைத்து வருகின்றனர். அவ் வாறு எம்மையும் அனுப்பி வையுங்கள் எனக் கோரினால் உங்களை அனுப்பிவைக்க மாறு உங்கள் நாட்டு அதிகாரி களையே கோரவேண்டும் அதாவது இந்திய அதிகாரி களை கேளுங்கள் எனப் பதிலளிக்கின்றனர். எனவே எம்மை இந்தியாவுக்கு அனுப்ப யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாதிக் கப்பட்ட இந்திய மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் இந்தியத் தூதரக அதிகாரிகளைத் தொடர்புகொண்டு கேட்ட போது, வடக்கில் 341பேர் தங்கியிருப்பினும் இலங்கை முழுவதும் 5 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்கள் அனைவ ரையும் அனுப்புவதனால் குறைந்தது 8 விமானங்கள் தயார் செய்யவேண்டும். அதேநேரம் தமிழகத்துக்குள் எதிர்வரும் 31ஆம் திகதி வரை எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அறி விக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டே அடுத்த கட்டம் தொடர்பில் ஆராயப்படும் என்றனர். (ப-105)



# மன்னாரில் எகிறியது கசிப்பு உற்பத்தி

மன்னார், மே 15

கொரோனா பரவலைக் கருத்தில் கொண்டு மது விற்பனை நிலையங்கள் மூடப்பட்டதால், மன்னாரில் கசிப்பு உற்பத்தி அண்மைக் காலமாக அதிகரித்துள் ளது என்று சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

இந்த மாதத்தின் முதல் பாதிப் பகுதியில் மட் டும் 296 லீற்றர் கசிப் பும், 4 ஆயிரத்து 452 லீற்றர் கோடாவும் கைப் பற்றப்பட்டுள்ளன. கடந்த காலங்களுடன் ஒப்பீடுகளில் அண்மைக் காலமாக மன்னாரில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிக ரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ம-213)

# கொங்கிறீட் தட்டு இடிந்து வீழ்ந்ததில் சிறுவன் உயிரிழப்பு

பசறை, மே 15

வீட்டின் கொங்கிறீட்டி லான தட்டு இடிந்து வீழ்ந்ததில், அதில் சிக் குண்ட சிறுவன் உயிரி ழந்துள்ளார். இந்தச் சம்பவம் பசறை கொட் டமுதுன பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த 17 வயதுடைய ஆர்.எம். திசரகுமார என்ற சிறு வனே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பசறை திடீர் மரண விசா ரணை அதிகாரி டபள்யு. எம். ஏ. விக்ரமரட்ன விசாரணைகளை மேற் கொண்டார். நான்கு மாதங்களுக்கு முன்னர் இம் மாணவனின் தந்தை அதே வீட்டில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட் டது. (ஐ)



# முள்ளிவாய்க்கால் அவலத்தை நினைவுபடுத்த உப்புக் கஞ்சி

முல்லைத்தீவு, மே 15

முள்ளிவாய்க்கால் உப்புக் கஞ்சியை நினைவுபடுத்தும் வேலைத்திட்டம் ஒன்று தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தின ரால் இன்று முள்ளிவாய்க்காலில் வைத்து ஆரம்பிக்கப்பட்டது

போர் முடிவுற்று பல ஆண்டுகள் உருண் டோடிப் போனாலும் போர் தந்த வடுக் களை யாராலும் எளிதில் மறந்து விட முடியாது. போர்க்கால நினைவுகளில் மறக்கமுடியாத ஒன்றாக விளங்குவது தான் உப்பு கஞ்சி. மக்களது உயிரை தக்க வைத்துக் கொண்ட முதன்மையான உணவாதாரமாக உப்புக் கஞ்சியே தனியிடம் பிடித்தது. பல இலட்சம் மக்கள் கஞ்சி உணவுக்காக காத்திருந்து தமது பசிப்பிணியைப் போக்கிய வரலா றுகளும் உண்டு. முள்ளிவாய்க்காலில் உணவுக்காக மக்கள் பட்ட அவலத்தை யும் கஞ்சி உணவே மக்களது உயிரைத் தக்கவைத்தது என்பதையும் வெளிப்படுத் தும் முகமாகவும் அவற்றை எதிர்காலச் சந்ததியினருக்கு இளைய தலைமுறையின ருக்கு தெரியப்படுத்தும் முகமாகவும் நினைவேந்தல் நாள்களில் கஞ்சி உணவை அங்கு வரும் மக்களுக்கு வழங்குவது வழமையாகும்.

கொவிட்19 நோய்த்தொற்றின் காரண மாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ள இந்நிலை யில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினை வுபடுத்தும் முகமாக முள்ளிவாய்க்கால் மண்ணிலிருந்து பச்சையரிசி உப்பு அடங்கிய கஞ்சிக்கான சிறு பைகளை வழங்கும் வேலைத்திட்டமே இன்று காலை மிகவும் உணர்வுபூர்வமாக ஆரம் பித்து வைக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் கிழக்கு முள்ளி வாய்க் கால் மேற்கு வலைஞர் மடம், அம்பல வன் பொக்கணை, மாத்தளன் ,புதுக்குடி யிருப்பு முதலிய பல பிரதேசங்கள் உள்ளடங்களாக ஆயிரம் பொதுமக்க ளுக்கு உப்புக் கஞ்சிக்கான பொதிகள் இதன்போது வழங்கிவைக்கப்பட்டன. அத்துடன் மரக்கறி நாற்றுக்களும் பகிர்ந் தளிக்கப்பட்டன.

கிளிநொச்சி, வவுனியா முதலிய மாவட் டங்களிலும் ஆயிரம் பொதுமக்களுக் கான கஞ்சி உணவுப் பொதிகளை வழங் கும் செயற்திட்டம் சமநேரத்தில் முன் எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட் டது. (ப)

# நிவாரணம் வழங்கலில் முறைகேடு என குற்றச்சாட்டு

பதுளை, மே 15

ஹல்துமுள்ளை பிரதேச சபைத் தவிசாளர், அரச நிவாரணப் பொருள்கள் வழங்கலில் முறைகேடாக நடந்தார் எனத் தெரிவித்து அவருக்கு எதிராக சபை உறுப்பினர்களால் கண் டன ஊர்வலம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

சபையின் ஊழல்களை எதிர்க்கும் சபை உறுப்பி னர்கள் அமைப்பு, கறுப்பு பட்டியணிந்தும், கண்டன பதாதைகளை தாங்கிய வண்ணமும் ஊர்வலத்தை மேற்கொண்டனர்.

மீன் ரின் மற்றும் மைசூர் பருப்பு ஆகியன வழங்க லின்போதே முறைகேடு கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட் டது. (ஐ)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 15.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.